செ.வெ.எண்:03 நாள்:02.01.2018

# பத்திரிக்கைச் செய்தி

திருநெல்வேலி மாவட்டத்தில் ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளான கிராம ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம், மாவட்ட ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சிகளின் வரைவு வார்டுகள் மறுவரையறை கருத்துருக்கள் 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின் அடிப்படையில் பொதுமக்களின் பார்வைக்கு 27.12.2017 அன்று வெளியிடப்பட்டது.

மேற்படி வரைவு மறுவரையறை கருத்துருக்களில் திருத்தங்கள் , ஆட்சேபனைகள், கருத்துருக்கள் ஏதும் இருப்பின் அது குறித்தான விண்ணப்பங்கள் 02.01.2018-க்குள் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளின் வார்டு மறுவரையறை அதிகாரிக்கு விண்ணப்பிக்க கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது.

மேற்படி கால அவகாசம் போதுமானதாக இல்லையென்று தெரிவித்து கூடுதல் கால அவகாசம் வழங்கக் கோரி அரசியல் கட்சிகள் மற்றும் பொது மக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகள் மறுவரையறை ஆணையத்தால் பரிசீலிக்கப்பட்டதைத் தொடர்ந்து வார்டு மறுவரையறை குறித்த ஆட்சேபனைகள்/ கருத்துருக்களை அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்கள் 05.01.2018 அன்று மாலை 5.00 மணிக்குள் தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளின் வார்டு மறுவரையறை அதிகாரிக்கு எழுத்து மூலமாக தெரிவிக்கலாம்.

அரசியல் கட்சிகள் மற்றும் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட ஆட்சேபனைகள்/ கருத்துருக்கள் குறித்து மறுவரையறை ஆணையத்தால் நடத்தப்படும் மண்டல வாரியான ஆலோசனைக் கூட்டத்தில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். அச்சமயம், ஆட்சேபனை அல்லது கருத்துரு தெரிவித்தவர்கள் நேரடியாக ஆய்வின்போது ஆஜராகி தங்களின் கோரிக்கையை எடுத்துரைக்கலாம். என மாவட்ட வார்டு மறுவரையறை அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

வெளியீடு:செய்தி மக்கள் தொடர்பு அலுவகம் திருநெல்வேலி.